

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.9.2025) செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக நிறுவப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை இராணி வேலுநாச்சியார் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து, அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் பிரபாகரராஜா, அரவிந்த் ரமேஷ், க.கணபதி, துணை மேயர் மு. மகேஷ்குமார், முன்னாள் அமைச்சர் அன்வர் ராஜா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (19.9.2025) தலைமைச் செயலகத்தில், மாநில அளவிலான ஐந்தாவது மாவட்ட அளவிலான வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் (DISHA) கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், அரசு சாரா அமைப்பின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.9.2025) தலைமைச் செயலகத்தில், போர்ச்சுக்கலில் நடைபெற உள்ள சர்வதேச போட்டியில் பங்குபெறும் ஃபிளையிங் டிஸ்க் அணிக்கு 6 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி உள்பட விளையாட்டு வீரர், வீராங்கனைகள், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (19.9.2025) தலைமைச் செயலகத்தில், டைவிங் போட்டியில் சாதனை படைத்த வீராங்கனை சா. அர்ச்சனா சந்தித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி உள்பட விளையாட்டு வீரர், வீராங்கனைகள், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து விளையாட்டு வீரர் – வீராங்கனைகள்

# விளையாட்டு உபகரணங்கள் வாங்க - பயிற்சி பெற ரூ.23,21,140 லட்சத்திற்கான காசோலைகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, செப்.20**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்காகவும், பயிற்சி பெறுவதற்காகவும் 23,21,140 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.**

முதலமைச்சர் அவர்கள் இந்தியாவின் விளையாட்டு தலைநகராக தமிழ்நாட்டினை உருவாக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். அதனடிப்படையில் விளையாட்டு வீரர்களுக்கு உதவுவதற்காக தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையை துவக்கி அந்த நிதியில் இருந்து விளையாட்டு உபகரணங்கள் வாங்க நிதியுதவி வழங்கப்படுவதுடன், வெளிநாடுகளில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்கவும், விளையாட்டு வீரர்கள் சர்வதேச, தேசிய அளவிலான போட்டிகளில் பங்குபெறும் வகையில் சிறப்பு பயிற்சிகள் மேற்கொள்ளவும் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.9.2025) தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியிலிருந்து பதக்கங்கள் வென்ற பாரா தடகள வீராங்கனைகள் முத்துமீனா வெள்ளைசாமி, நா. சங்கர் சத்யா, பாரா தடகள வீரர் க. கஜன் கௌதம் ஆகியோர் ஆஸ்திரேலியா நாட்டின் பிரிஸ்பேன் நகரில் அக்டோபர் 8 முதல் 15 வரை நடைபெற உள்ள 2025 தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்துக் கொள்வதற்காக தலா 2,61,800 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

மேலும் பாரா பேட்மிண்டன் வீரர் தினகரன் பாண்டுரங்கன் நடைபெற உள்ள உலக சாம்பியன்ஷிப் மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக பயிற்சி மேற்கொள்ள 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையையும், தங்கப் பதக்கம் வென்ற நீச்சல் வீராங்கனை பிரமிதி ஞானசேகரன் பக்ரைன் நாட்டில் நடைபெறும் 2025 ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் பங்கேற்கவும், விளையாட்டு உபகரணங்கள் வங்குவதற்காகவும் 1.25 லட்சம் ரூபாய்க்கான காசோலையையும், தேசிய சீனியர் தடகள சேம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தடகள வீராங்கனை கி. கோபிகா விளையாட்டு உபகரணங்கள் வங்குவதற்காக 1 லட்சம் ரூபாய்க்கான காசோலையையும் மற்றும் வில்வித்தை வீராங்கனை கே. எஸ். வெனிசா ஸ்ரீ விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கு 4,10,740 ரூபாய்க்கான காசோலையையும் வழங்கினார்.

போர்ச்சுக்கலில் நடைபெறும் சர்வதேச போட்டியில் பங்குபெறும் ஃபிளையிங் டிஸ்க் அணிக்கு 6 லட்சம் ரூபாய்க்கான காசோலையையும், 75ஆவது தேசிய ஜீனியர் கூடைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விளையாட்டு விடுதி கூடைப்பந்து வீரர், வீராங்கனைகள் ர.ர. அஸ்வீன், ஐ. ஆகாஷ், பா.சு. ராஜலெட்சுமி, பெ.குருதீபா, பா.ஸ்ரீராஜலெட்சுமி ஆகியோருக்கு விளையாட்டு உபகரணங்களுக்காக தலா 30 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளையும், இரக்பி வீராங்கனை ந.சு.அக்ஷயாவிற்கு உபகரணங்கள் வாங்குவதற்காக 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையையும் வழங்கினார்.

டைவிங் போட்டியில் சாதனை படைத்த வீராங்கனை சா. அர்ச்சனா, உலக அளவில் இந்தியா மற்றும் தமிழ்நாட்டை பிரதிநிதித்துவபடுத்திய, உலகிலேயே ஆர்க்டிக் மிஷன் முடித்த இளம் வயது விண்வெளி வீராங்கனை செல்வி இனியா பிரகதி ஆகியோர் துணை முதலமைச்சர் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி உள்பட விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.





தாம்பரம் மாநகராட்சி, மண்டலம்–4, வார்டு–32 மற்றும் வார்டு–33 க்குட்பட்ட கடப்பேரி பகுதிகளில் ரூ.17.20 கோடி மதிப்பீட்டில் அமையவுள்ள புதிய மழைநீர் வடிகால் மற்றும் நடைபாதை அமைக்கும் பணிகளை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு – குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் இணைந்து கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் தி.சினேகா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டலக்குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஈரோடு தூய்மை மிஷன் – கழிவு சேகரிப்பு இயக்கம் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் வீட்டுவசதி, நகர்புற வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டு உறுதிமொழி ஏற்றனர். உடன் தூய்மை பணியாளர்கள் மற்றும் துறைச்சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில், கே.எஸ்.எம். நாதன் தலைமையில்

# எழும்பூர் தெற்கு பகுதி சார்பில் முன்னேற்றப் பாதையில் முப்பெரும் விழா!

## நடிகர் சத்யராஜ், புலவர் இரெ. சண்முகவடிவேல், கவிஞர் பா.விஜய் சிறப்புரை!

சென்னை,செப்.20-

சென்னை கிழக்கு மாவட்டம் 58, 58அ வட்டம், எழும்பூர் தெற்கு பகுதி சார்பில் “முன்னேற்றப் பாதையில் முப்பெரும் விழா” முப்பெரும் தொடர் நிகழ்ச்சி - 1, மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம். நாதன் தலைமையில் இலட்சியத் தலைவர்களின் தத்துவம்! எழுச்சியில் மலர்ந்தது திராவிடம்! என்ற தலைப்பில் (18.09.2025 வியாழக்கிழமை) அன்று மாலை 6.00 மணிக்கு ஒய்.எம்.சி.ஏ அரங்கம், ரித்தர்டன் சாலை, டவுட்டனில் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் புரட்சி தமிழன் நடிகர் சத்யராஜ், புலவர் இரெ.சண்முகவடிவேல், கவிஞர்.பா.விஜய் ஆகியோர் நிகழ்ச்சியில் உரையாற்றினார்கள்.

மேலும் இந்நிகழ்ச்சியில் பகுதிக் கழகச் செயலாளர்கள் வி.சுதாகர், சொ.வேலு எம்.சி., அவைத் தலைவர் கோ.ஏகப்பன், பா.ஸ்ரீராமுலு எம்.சி. பரிதிஇளம்சுருதி எம்.சி. வானவில் விஜய், இராஜேஸ்வரிஸ்ரீதர்.எம்.சி, சுதா தீனதயாளன் எம்.சி., அ.நிர்மலா தேவி, கோ.மணி, எல். சுந்தர்ராஜன் எம்.சி., ஃபாத்திமா முசாஃபர் எம்.சி. தெற்கு பகுதி கழக நிர்வாகிகள்: எஸ்.ரசூல், டி.வி.வேலு, எம்.மலர்மாறன், கே.அன்னபூரணி, எஸ்.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப. தாயகம்கவி, மற்றும் கே.எஸ். இரவிச் சந்திரன், தமிழன் பிரசன்னா, பி.எம்.யாழினி,எஸ். முரளி, எஸ்.டால்பின் ஹரி, இ.மொய்தீன், வான்மதிகதிரவன்,சி.சேகர்,ஆர்.எம்.ரங்கநாதன்,சு.மனோகர்,ந.பாலு, வி.அபாய்,தி.தயாளன்,க.நந்தீஸ்வரன் மூ சரவணன், எம் தில்லை குமார்,பி சி சம்பத்குமார், ஏ.கே.கருணாகரன், சூளை சுப்பராயலு, ம வெற்றிவீரன், ஆ. நித்யராஜ், து. களரி முத்து, எஸ் ராஜதுரை, மூ ஜெயக்குமார் ,தன இளங்கோ, எம் சுரேஷ், எஸ் துலுக்கானம், ஏ.கே .ரபிக் பேக்,ரா.காந்தி, ஜெயசங்கர், டி. கிருஷ்ணன், டி.கே. விஜயராஜ், எல்ஜசி கருணா, மு.முரளிதரன், எஸ் நாராயணன், மு.கமல கண்ணன், டி.செபஸ்டின் மற்றும் அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் 58, 58 (அ) வட்டச் செயலாளர்கள் வி.விஜயகுமார் ஆர்.பாபு ஆகியோர் நன்றி கூறினார்கள்.